**17 March, 2026**

# The Anti-Human Transgender Persons (Protection of Rights) Amendment Bill must be withdrawn immediately!

On 13 March 2026, the Transgender Persons (Protection of Rights) Amendment Bill was introduced in the Lok Sabha by the Union Minister for Social Justice and Empowerment, Dr. Virendra Kumar.

The amendment violates the fundamental rights guaranteed under the Constitution of India and contradicts the historic Supreme Court judgment ***NALSA vs Union of India (2014)***, as well as internationally recognised healthcare standards. The **NALSA judgment** affirmed the right to self-identification, recognising that every person has the right to determine and declare their own gender identity with dignity and autonomy.

The proposed amendment removes the right to self-identification and shifts this power to government-appointed medical boards and district magistrates forcing transgender persons to prove their identity through medical scrutiny and bureaucratic approval. This process violates privacy, bodily autonomy, dignity and disproportionately harms already marginalised transgender communities.

The bill removes identities such as trans women, trans men and genderqueer persons from the definition of transgender persons. This effectively excludes communities including Thirunangai, Thirunambi, Trans Masculine and Non-binary persons from legal recognition and protection. It also makes hormone treatment, medical procedures and surgeries mandatory for recognition, while enabling surveillance over private medical records by requiring them to be submitted to district authorities.

The amendment risks criminalising Hijra-Aravani community structures, transgender families, activists, NGOs and allies by reviving harmful stereotypes that transgender persons "force" others to become transgender. These provisions can easily be misused to harass community leaders, support networks, organisations and individuals who assist transgender persons in living with dignity.

The bill therefore empowers police, courts, district authorities and medical boards, while disempowering transgender persons themselves. It does not benefit any community under the transgender umbrella— including trans men, trans women, hijra-aravani guru-chela systems, intersex persons, non-binary persons, kothis and genderqueer persons.

Instead of rolling back rights, the government must address the real demands of transgender communities, including:

- Horizontal reservations
- Age relaxations and mark concessions
- Access to education and public employment
- Housing schemes
- Public transport concessions
- Accessible and quality healthcare
- Pensions and social security
- Shelter homes and support for elderly transgender persons

## Our Appeal

We, the **Trans Bill Protest Committee, Tamil Nadu**, call upon all individuals, social justice movements, civil society organisations, trade unions, political parties and community leaders to stand with Transgender, Gender Diverse and Intersex communities. We demand the immediate withdrawal of this amendment bill and the protection of the constitutional right to self-identification of gender identity.

Likewise, we demand that the government should include relevant communities - Trans women, Trans men, Kothi, Intersex and GenderQueer Communities together in the upcoming initiatives.

Thegovernment should not think any other bills such as this which does not provide any relief and criminalizes the own transgender community who are already marginalized and thrown out of their own houses.

Thank you!

**Contact info:**
**Kalaimamani Sudha - 9500057212**
**Fred - 9067365881**

# திருநர் மசோதா எதிர்ப்பு போராட்டக் குழு தமிழ்நாடு

17 மார்ச், 2026

## மனித உரிமைக்கு எதிரான "திருநர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்ட மசோதாவை" உடனடியாகத் திரும்பப்பெற வேண்டும்!

கடந்த 13 மார்ச் 2026 அன்று ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் மேம்பாட்டு துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் அவர்கள் மக்களவையில் திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்ட மசோதாவை அறிமுகப்படுத்தினார்.

இந்த மசோதா இந்திய அரசியலமைப்பு சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகளை மீறுகிறது. மேலும் இது திருநர் உரிமைகள் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் இரண்டு வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பான **தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA) vs இந்திய யூனியன் (2014)** தீர்ப்புக்கும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்ட்ட சுகாதார தரநிலைகளுக்கும் மனித உரிமைகளுக்கும் எதிரானதாகும்.

NALSA தீர்ப்பு **"பாலின சுய அடையாள உரிமை"** (Self Identification) என்பதை உறுதிப்படுத்தியது. அதாவது ஒவ்வொரு நபருக்கும் தங்களின் பாலின அடையாளத்தைத் தாங்களே மரியாதையுடனும் தன்னாட்சியுடனும் தீர்மானித்து அறிவிக்கும் உரிமை உள்ளது.

இந்த மசோதா, திருநர் சமூகத்தினர் தங்களைத் தாங்களே அடையாளப்படுத்திக் கொள்ளும் உரிமையை நீக்குகிறது. அதற்குப் பதிலாக, அந்த அதிகாரத்தை அரசு நியமிக்கும் மருத்துவ குழுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்குகிறது. இதனால், திருநர் மக்கள் தங்களின் அடையாளத்தை நிரூபிக்க மருத்துவ பரிசோதனை மற்றும் நிர்வாக அனுமதி பெற வேண்டிய கட்டாயம் உருவாகிறது. இது அவர்களின் தனியுரிமை, உடல் தன்னாட்சி, சுயமரியாதை மற்றும் சமத்துவத்தை மீறுகிறது. ஏற்கனவே புறக்கணிக்கப்பட்டிருக்கும் திருநர் சமூகத்திற்கு இது கூடுதல் பாதிப்பையும் அநீதியையும் ஏற்படுத்துகிறது

இந்த மசோதா, வரையறை (Definition) என்ற பெயரில் திருநங்கை, திருநம்பி, இடைப்பாலினர் மற்றும் பாலின இருநிலைக்கு அப்பாற்பட்டவர்கள் சமூகத்தின் அடையாளங்களை நீக்குகிறது. இதனால் திருநர் சமூகங்கள் சட்ட அங்கீகாரமும், பாதுகாப்பும் பெற முடியாத நிலை உருவாகிறது.

இந்த மசோதா, திருநர் அங்கீகாரம் பெற ஹார்மோன் சிகிச்சை, மருத்துவ நடைமுறைகள் மற்றும் அறுவை சிகிச்சை ஆகியவற்றை கட்டாயமாக்குகிறது. மேலும், தனிப்பட்ட மருத்துவ பதிவுகளை மாவட்ட நிர்வாகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற புதிய கண்காணிப்பு அமைப்பையும் உருவாக்குகிறது.

இந்த திருத்தம், திருநர் குடும்பங்கள், ஜமாத் அமைப்புகள், செயற்பாட்டாளர்கள், சமூக அமைப்புகள் மற்றும் ஆதரவாளர்கள் மீது அரசின் தொந்தரவு மற்றும் குற்றச்சாட்டுகள் வரும் அபாயத்தை உருவாக்குகிறது. மேலும், “திருநர் நபர்கள் மற்றவர்களை வற்புறுத்தி திருநராக மாற்றுகிறார்கள்” என்ற பழைய, தீங்கான வெறுப்பு பிரச்சாரத்தை இது மீண்டும் உயிர்ப்பிக்கிறது.

இந்த மசோதா, காவல்துறை, நீதிமன்றம், மாவட்ட நிர்வாகம் மற்றும் மருத்துவ குழுக்களுக்கு அதிகாரம் அளிக்கிறது; ஆனால் திருநர் சமூகத்தினரிடமிருந்து அந்த அதிகாரத்தை பறிக்கிறது. இதனால், திருநர் அடையாளத்தின் கீழ் வரும் எந்த சமூகத்திற்கும் நன்மை இல்லை. திருநங்கை, திருநம்பி, இடைப்பாலினர், கோத்திகள், பாலின இருநிலைக்கு அப்பாற்பட்டவர்கள், குரு-சேலா ஜமாத் அமைப்புகள் ஆகியோரின் அடையாளங்களை முழுமையாக அழிக்கும் அபாயம் உள்ளது.

காலம் காலமாக ஒடுக்கப்பட்ட திருநர் சமூகத்திற்கு நல உரிமைகளை வழங்குவதற்கு பதிலாக, எங்கள் உடல் அடையாளங்கள் மீது இன்னும் எத்தனை ஆண்டுகள் தான் அரசியல் செய்வீர்கள்? உண்மையில் உரிமைகளை வழங்க அரசு விரும்பினால், திருநர் சமூகத்தின் அரை நூற்றாண்டு கால கோரிக்கைகளான கீழ்க்கண்ட கோரிக்கைகளை உடனே நிறைவேற்ற வேண்டும்:

- கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் கிடைமட்ட ஒதுக்கீடு (Horizontal Reservation)
- வயது தளர்வு மற்றும் மதிப்பெண் தளர்வு
- கல்வி மற்றும் அரசு வேலை வாய்ப்புகளுக்கான அணுகல் எளிமையாக்கல்
- வீட்டு வசதித் திட்டங்கள்
- பொதுப் போக்குவரத்து
- தரமான மற்றும் அணுகக்கூடிய சுகாதார சேவைகள்
- ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு
- பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் முதிய திருநருக்கான ஆதரவு

# திருநர் மசோதா எதிர்ப்பு போராட்டக் குழு தமிழ்நாடு

**<u>எங்கள் கோரிக்கை</u>**

திருநர் உரிமை திருத்த மசோதா 2026-ஐ உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். பாலின சுய அடையாள உரிமையை அரசியலமைப்பின் கீழ் பாதுகாக்க வேண்டும்!

'**திருநர் மசோதா எதிர்ப்பு போராட்டக் குழு – தமிழ்நாடு**' ஆகிய நாங்கள், மக்கள், தன்னார்வலர்கள், அரசு அமைப்புகள், சமூகநீதி/சமூக இயக்கங்கள், குடியுரிமை/ஜனநாயக அமைப்புகள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், சமூக தலைவர்கள் அனைவரையும் திருநங்கை, திருநம்பி, இடைப்பாலினர் மற்றும் பாலின இருநிலைக்கு அப்பாற்பட்டவர் சமூகத்துடன் கரம் கோர்க்க வேண்டுகிறோம்!

எதிர்காலத்தில் சட்டம் அல்லது அரசுத் துறைகள் எடுக்கும் முன்னெடுப்புகளில், திருநங்கை, கோத்தி, திருநம்பி, இடைப்பாலினர் மற்றும் பாலின பன்முகத்தன்மை கொண்ட அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்து செயல்படுத்த வேண்டும்.

வீட்டை விட்டு வெளியேற்றப்படும் திருநர் சமூகத்திற்கு, எந்த விதமான ஆதரவும் வழங்கப்படாமல் சொந்த திருநர் சமூகத்தையே குற்றவாளியாகத் திணிக்க நினைக்கும் இது போன்ற எந்த மசோதாக்களையும் எதிர்வரும் காலங்களில்கூட கொண்டு வர, அரசு நினைத்துக் கூடப் பார்க்கக் கூடாது.

நன்றி!

**தோடர்புகொள்ள:**

**கலைமாமணி சுதா - 9500057212**
**ஃப்ரெட் – 9067365881**